வகுப்பு : 11

தேர்வு எண் 1 1 3 0 7 X

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

## வரலாறு

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20X1=20

1. வரலாற்றின் பழமையான காலம் ஆகும் ---------
அ) பழங்கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) செம்புக் காலம் ஈ) இரும்புக்காலம்
2. வேதப்பாடல்களின் முக்கியத் தொகுப்பின் பெயர்
அ) பிராமணங்கள் ஆ) சம்ஹிதைகள் இ) ஆரண்யகங்கள் ஈ) உபநிடதங்கள்
3. பகவதிசூத்திரம் ஒரு --------- நூலாகும்.
அ) பௌத்தம் ஆ) சமணம் இ) ஆசீவகம் ஈ) வேதம்
4. மெகஸ்தனிஸ் எழுதிய சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.
அ) இண்டிகா ஆ) முத்ரா ராட்சசம் இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்தசாஸ்திரம்
5. மூன்றாம் புத்த சமய மாநாடு நடைபெற்ற இடம் ---------
அ) ராஜகிருகம் ஆ) வைஷாலி இ) பாடலிபுத்திரம் ஈ) காஷ்மீர்
6. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது.
i) தலையாலங்கானம் – நெடுஞ்செழியன்
ii) பட்டினப்பாலை – உருத்திரங்கண்ணனார்
iii) பாகு – இலங்கை
iv) திருவஞ்சிக்களம் – சோழர்
அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)
7. இந்தோ– கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர்
அ) யூதிடெமஸ் ஆ) டெமட்ரியஸ் இ) மினாண்டர் ஈ) ஆண்டியால்சைடஸ்
8. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர்
அ) மொக ஆ) ருத்ரதாமன் இ) அஸிஸ் ஈ) யசோவர்மன்
9. விக்ரமாதித்யன் என்ற பட்டப்பெயரை கொண்ட குப்த மன்னன்
அ) சமுத்திர குப்தர் ஆ) இரண்டாம் சந்திரகுப்தர் இ) முதலாம் சந்திரகுப்தர் ஈ) ஸ்கந்த குப்தர்
10. பொருத்துக.

| எழுதியவர் | இலக்கியப் படைப்பு | | |
|---|---|---|---|
| அ) தன்வந்திரி | – 1. சூரிய சித்தாந்தா | அ) | 4, 3, 1, 2 |
| ஆ) வராஹமிகிரா | – 2. அமரகோஷா | ஆ) | 4, 1, 2, 3 |
| இ) ஆர்யபட்டர் | – 3. பிருஹத்சம்ஹிதா | இ) | 4, 2, 1, 3 |
| ஈ) அமரசிம்மா | – 4. ஆயுர்வேதா | ஈ) | 4, 3, 2, 1 |

11. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர்
அ) திக்நாதர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வாரகமிகிரர்
12. ஹர்ஷர்கன்னோசியின் அரியணையை ---------- இன் அறிவுரையின் படி ஏற்றுக் கொண்டார்.
அ) கிரக வர்மன் ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்
இ) பிரபாகரவர்த்தனர் ஈ) போஜி
13. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
அ) ஹர்ஷசரிதம் ஆ) பிரியதர்சிகா இ) அர்த்தசாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்
14. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக இணைக்கப்படவில்லை
1. மூன்றாம் கோவிந்தன் – வாதாபி
2. ரவிகீர்த்தி – இரண்டாம் புலிகேசி
3. விஷயம் – ராஷ்ட்டிரகூடர்
4. நம்மாழ்வார் – குருகூர்
15. ஆதி சங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு ----
அ) அத்வைதம் ஆ) விசிஷ்டாத்வைதம் இ) சைவசித்தாந்தம் ஈ) வேதாந்தம்
16. 8 ஆம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின் போது சிந்து அரசர் ஆவார்.
அ) ஹஜாஜ் ஆ) முகமது – பின் – காஸிம்
இ) ஜெயசிம்ஹா ஈ) தாகிர்
17. இபின் பாதூதா ஒரு நாட்டுப் பயணி
அ) மொராக்கோ ஆ) பெர்சியா இ) துருக்கி ஈ) சீனா
18. ஜிஸியா என்பது---------
அ) நிலவரி ஆ) சுங்கவரி இ) தலைவரி ஈ) நீர்வரி



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. --------- ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.

அ) 20 கி.கி ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி

20. பாண்டியர்களின் தலைநகரமாகும்

அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்

பகுதி - II

II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14

வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21. ஹோமினின் குறித்து சிறுகுறிப்பு வரைக.

22. ஜென்ட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.

23. சார்வாகம் குறித்து அறிந்தவற்றைக் கூறுக.

24. பிம்பிசாரர் எவ்வாறு மகதப் பேரரசை விரிவுபடுத்தினார்?

25. மதுரை காஞ்சியிலிருந்து நீ அறிவது என்ன?

26. சத்ரப்கள் பற்றி நீவிர் அறிவது யாது?

27. ஹீனார் குறித்து நீங்கள் அறிவது என்ன?

28. தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.

29. நாற்பதின்மர் அமைப்பு.

30. முதலாம் ராஜேந்திரனுக்கான பட்டங்கள் யாவை?

பகுதி - III 7x3=21

III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.

வினா எண் - 40 க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

31. அச்சூலியன், சோஹானியக் கருவித் தொழில்நுட்பம் குறித்து எழுதுக.

32. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.

33. பொ.ஆ.மு.ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவைதீகச் சிந்தனையாளர்களை அடையாளம் காண்க.

34. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்து பற்றி நீவீர் அறிவது என்ன?

35. சங்ககாலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்.

36. மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாது?

37. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்கள் யாவை? ஏதேனும் மூன்று காரணங்களைக் கூறுக.

38. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச்சின்னங்கள்.

39. புகழ்பெற்ற சைவ மூவர்கள்.

40. முகமது துக்ளக்கின் சோதனை முயற்சிகள் தோல்வியடைந்தற்கான காரணங்கள் என்னென்ன?

பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விளக்குக.

42. அ) இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் எவை?

(அல்லது)

ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும்.

43. அ) மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாக கட்டமைப்பை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பை குறித்து விவாதிக்கவும்.

44. அ) குப்தர்களின் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம் - விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துகள் யாவை?

45. அ) மாமல்லபுரம் கடற்கரை கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) அலா-உத் - தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும்.

46. அ) கோவில் - ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக.

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் கீழக்காணும் இடங்களைக் குறிக்கவும்.

1. டெல்லி 2. கிர்னார் 3. நாளந்தா 4. கலிங்கா 5. தௌலதாபாத்

47. அ) பாண்டியர் ஆட்சியில் வணிகத்திலும் வர்த்தகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியைக் கூறுக.

(அல்லது)

ஆ) டெல்லி சுல்தானிய கால தொடர்புடைய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் குறிக்கவும்.



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com